**<u>மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுக் கோருரிமை தீர்ப்பாயம்</u>**

சார்பு நீதிமன்றம், தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம்.

முன்னிலை: திரு.எஸ். விஜய் அழகிரி, பி.காம்., பி.எல்.,

சார்பு நீதிபதி, தேன்கனிக்கோட்டை

2026–ஆம் ஆண்டு மார்ச் 12–ஆம் நாள் வியாழன்கிழமை

(திருவள்ளுவராண்டு 2056– விசுவாவசு வருடம் – மாசி திங்கள் 28 ம் நாள்)

**<u>மோ.வா.வி.இ. அசல்.மனு எண். 15/2023 மற்றும் மோ.வா.வி.இ. அசல். மனு எண். 18/2023</u>**

**<u>CNR No. TNKI160006322023 மற்றும் CNR No. TNKI160005962023</u>**

**<u>மோ.வா.வி.இ. அசல்.மனு எண்.15/2023</u>**

பாக்கியரேகா ... மனுதாரர்

/எதிராக/

1. R. முனியம்மா
2. M/s. IFFCO TOKIO
   ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெணி லிமிடெட்

... எதிர்மனுதாரார்கள்

**<u>மோ.வா.வி.இ. அசல். மனு எண்.18/2023</u>**

காயத்ரி ... மனுதாரர்

/எதிராக/

1. R. முனியம்மா
2. M/s. IFFCO TOKIO
   ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெணி லிமிடெட்

... எதிர்மனுதாரார்கள்

இம்மனுக்களானது ஆனது முதன் முதலில் மோட்டார் வாகன விபத்து வழக்கு தீர்ப்பாயம், ஓசூர் (கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஓசூர்) நீதிமன்றத்தில் 16.11.2021 மற்றும் 01.12.2021 அன்று தாக்கல் செய்யப்பட்டு அங்கு MCOP எண் 277/2021 மற்றும் MCOP No 293/2021 என 18.11.2021 மற்றும் 07.12.2021 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு பின்னர் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றம், கிருஷ்ணகிரி ROC. No. 6294/2023, dt. 23.06.2023 ன்படி ஓசூர் கூடுதல் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு அங்கு 21.11.2023 ம் தேதியன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து பின்பு மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றம், கிருஷ்ணகிரி ROC. No. 11777/SHR 2023 ல் 10.11.2023 தேதியிட்ட உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் 22.12.2023 அன்று MCOP

No. 15/2023 மற்றும் MCOP No 18/2023 என கோப்புக்கு எடுக்கப்பட்டு இவ்விரு மனுக்களையும் ஒரு சேர ( Joint Trial ) விசாரிக்க 12.02.2026 ம் தேதியின்று குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு, அந்த குறிப்பாணை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் இரு மனுக்களையும் ஒரு சேர விசாரிப்பதற்கு உத்தரவிடப்பட்டு மோ.வா.வி.இ. அசல். மனு எண். 15/2023 ல் இரு தரப்பு வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டும், இரு மனுக்களும் என் முன்பாக 12.02.2026 ம் தேதி அன்று இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மோ.வா.வி. அசல். மனு எண். 15/2023 மனுதாரர் தரப்பில் திருமதி. A. மங்கையர்கரசி, B.A., B.L, அவர்கள் ஆஜராகியும், மோ.வா.வி.இ. அசல். மனு எண். 18/2023 மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி. K. செல்வி, M.L., MHRM, D.L., அவர்கள் ஆஜராகியும், இருமனுக்களிலும் 1 வது எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜராகததால் அவரைபொறுத்து ஒருதலைப்பட்சமாக உத்தரவிடப்பட்டும், இரு மனுக்களிலும் 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. M. ஜீவானந்தம் B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

## பொது உத்தரவு

மோ.வா.வி.இ. அசல். மனு எண். 15/2023 மனுதாரர் தனக்கு சாலை விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கு ரூ. 10,00,000/— இழப்பீடு கேட்டு இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**2. மனுவின் சுருக்கம் :**

| | |
|---|---|
| மனுதாரரின் பெயர், வயது, தொழில் மற்றும் வருமானம் | பாக்கியரேகா, க/பெ. முரளி ரெட்டி, தனியார் நிறுவன ஊழியர் ( ரத்னா பேக்கேஜிங் இண்டஸ்டிரிஸ், மாதம் ரூ.15,000/— |
| விபத்து சம்பவ இடம், நாள் மற்றும் நேரம் | கடந்த 16.08.2021 ம் தேதி இரவு சுமார் 07.00 மணிக்கு கெலமங்கலம் — தேன்கனிக்கோட்டை சாலை, கெலமங்கலம் தபால் நிலையம் அருகில், |

| | |
|---|---|
| | ஓம்சக்தி க்ரோசரி நிலையம் முன்பு |
| குற்ற வழக்கு விபரம் | கெலமங்கலம் PS, கிருஷ்ணகிரி மாவட்டம், Cr. 275/2021 U/s. 279, 337 of IPC |
| காயத்தின் விபரம் | மனுதாரருக்கு விபத்தினால்<br>1. Abrasion over left elbow<br>2. Abrasion over right ring finger size<br>3. Abrasion abdomen wall below umblical size<br>4. Abasion over sacral region size<br>5. Left fore arm deformative + Swwlling + crepitus + tenderness. Rom restricted and painful, Distal Pulse<br>போன்ற காயங்கள் ஏற்பட்டுள்ளது. |
| சிகிச்சை விபரங்கள் | மனுதாரர் விபத்து ஏற்பட்டவுடன் 16.08.2021 அன்று கெலமங்கலம் ஆரம்ப சுகாதர நிலையத்திலும், பிறகு 16.08.2021 அன்று ஒசூா காவேரி மருத்துவமனையிலும், பின்பு திருப்பூர் கோவிந்தசாமி மருத்துவமனையிலும், பின்பு 17.08.2021, 01.09.2021 மற்றும் 20.09.2021 ஆகிய தேதிகளில் ஸ்ரீ ஹரி நாராயண வைத்தியர் விலாகத்தில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்ததாக குறிப்பிட்டுள்ளார். |
| சம்பவ விபரங்கள் | கடந்த 16.08.2021 அன்று காயமடைந்த பாக்கியரேகா இரவு சுமார் 07.00 மணிக்கு வழக்கம் போல தனது பணிக்கு சென்றுவிட்டு சக ஊழியரான காயத்ரியுடன் கெலமங்கலம் – தேன்கனிக்கோட்டை சாலை, கெலமங்கலம் தபால் நிலையம் அருகில், ஓம்சக்தி கிராசரி நிலையம் |

| | |
|---|---|
| | முன்பு நின்றுகொண்டிருந்தபோது எதிர்புறம் TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன ஓட்டுநர் சாலை விதிகளை மீறி அலட்சியமாகவும் அதிவேகமாகவும் வாகனத்தை ஓட்டி சென்று மனுதாரர் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், இந்த விபத்திற்கு 2 வது எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன ஓட்டுநர் சாலை விதிகளை மீறி அலட்சியமாகவும் அதிவேகமாகவும் வாகனத்தை ஓட்டி சென்று மனுதாரர் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்திற்கு 1 வது எதிர்மனுதாரர் ஓட்டுநரும், 2 வது எதிர்மனுதாரரால் காப்பீடு செய்யப்பட்ட TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன ஓட்டுநர் அதிவோகமாகவும், அலட்சியமாகவும், சாலை விதிகளைப் பொருட்படுத்தாமலும் ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தியதாக கூறப்பட்டுள்ளது. |
| மனுதாரர் கோரியுள்ள இழப்பீடு தொகை | ரூ. 10,00,000/- |

**<u>மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு மனு எண். 18/2023</u>**

மனுதாரர் தனக்கு சாலை விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கு ரூ. 20,00,000/- இழப்பீடு கேட்டு இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**2. மனுவின் சுருக்கம் :**

| | |
|---|---|
| மனுதாரரின் பெயர், வயது, | காயத்ரி, க/பெ. வெங்கடராஜ், தனியார் நிறுவன ஊழியர் ( ரத்னா பேக்கேஜிங் இண்டஸ்டிரிஸ், மாதம் |

| | |
|---|---|
| தொழில் மற்றும் வருமானம் | ரூ.20,000/– |
| விபத்து சம்பவ இடம், நாள் மற்றும் நேரம் | கடந்த 16.08.2021 ம் தேதி இரவு சுமார் 07.00 மணிக்கு கெலமங்கலம் – தேன்கனிக்கோட்டை சாலை, கெலமங்கலம் தபால் நிலையம் அருகில், ஓம்சக்தி க்ரோசரி நிலையம் முன்பு |
| குற்ற வழக்கு விபரம் | கெலமங்கலம் PS, கிருஷ்ணகிரி மாவட்டம், Cr. 275/2021 U/s. 279, 337 of IPC |
| காயத்தின் விபரம் | மனுதாரருக்கு விபத்தினால் Type II Compound Communited Middle 1/2rd Both Bone போன்ற காயங்கள் ஏற்பட்டுள்ளது. |
| சிகிச்சை விபரங்கள் | மனுதாரர் விபத்து ஏற்பட்டவுடன் கெலமங்கலம் ஆரம்ப சுகாதர நிலையத்திலும், பிறகு ஓசூர் காவேரி மருத்துவமனையிலும் 16.08.2021 முதல் 22.08.2021 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்ததாக குறிப்பிட்டுள்ளார். |
| சம்பவ விபரங்கள் | கடந்த 16.08.2021 அன்று காயமடைந்த காயத்ரி இரவு சுமார் 07.00 மணிக்கு வழக்கம் போல தனது பணிக்கு சென்றுவிட்டு சக ஊரியரான பாக்கிய ரேகாவுடன் கெலமங்கலம் – தேன்கனிக்கோட்டை சாலை, கெலமங்கலம் தபால் நிலையம் அருகில், ஓம்சக்தி கிராசரி நிலையம் முன்பு நின்றுகொண்டிருந்தபோது எதிர்புறம் TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன ஓட்டுநர் சாலை விதிகளை மீறி அலட்சியமாகவும் அதிவேகமாகவும் வாகனத்தை ஓட்டி சென்று மனுதாரர் மீது மோதி விபத்து |

| | |
|---|---|
| | ஏற்பட்டுள்ளது என்றும், இந்த விபத்திற்கு 2 வது எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன ஓட்டுநர் சாலை விதிகளை மீறி அலட்சியமாகவும் அதிவேகமாகவும் வாகனத்தை ஓட்டி சென்று மனுதாரர் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்திற்கு 1 வது எதிர்மனுதாரரின் ஓட்டுநரும், 2 வது எதிர்மனுதாரரால் காப்பீடு செய்யப்பட்ட TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன ஓட்டுநர் அதிவோகமாகவும், அலட்சியமாகவும், சாலை விதிகளைப் பொருட்படுத்தாமலும் ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தியதாக கூறப்பட்டுள்ளது. |
| மனுதாரர் கோரியுள்ள இழப்பீடு தொகை | ரூ. 20,00,000/- |

**3. இரு மனுக்களிலும் 1 வது எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகததால் அவரைப்பொறுத்து தோன்றாதரப்பினராக உத்தரவிடப்பட்டுள்ளார்.**

**<u>4. இரு மனுக்களிலும் 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u>**

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் உண்மைக்கு புறம்பானது என்றும், இந்த எதிர்மனுதாரரால் எதிர்உரையில் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும் எனவும், மனுதாரரின் மனு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றும், மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் விபத்து நடைபெறவில்லை என்றும், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை சாட்சியம்

மற்றும் ஆவண ஆதாரங்கள் மூலம் நிரூபிக்க வேண்டும் என்றும், விபத்தானது TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன ஓட்டுநர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் சாலை விதிகளை பின்பற்றாமலும் கவனக்குறைவாலும் விபத்து ஏற்பட்டுள்ளது என்று கூறுவது தவறு என்றும், மனுதாரரின் கவனக்குறைவினால் தான் விபத்து ஏற்பட்டது என்றும், விபத்திற்கு மனுதாரர்கள் பாக்கிய ரேகா மற்றும் காயத்ரி தான் காரணம் என்றும், விபத்தின்போது 1வது எதிர்மனுதாரர் / உரிமையாளர் மற்றும் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், எனவே 2ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும், மனுதாரரின் தொழில், வயது, வருமானம், காயத்தின் தன்மை மற்றும் சிகிச்சை விபரங்கள் ஆகியவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும் மனுதாரர் பல்வேறு தரப்பின் கீழ் கோரியுள்ள இழப்பீடு அதிகமானது என்றும், எனவே, மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியவை.**

1. இரு மனுக்களிலும் யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது ?
2. இரு மனுக்களிலும் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க பொறுப்பானவர்கள் யார் ?
3. இரு மனுக்களிலும் மனுதாரருக்கு கிடைக்ககூடிய இழப்பீடு தொகை எவ்வளவு ?
4. இரு மனுக்களிலும் மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் என்ன?

**6. பிரச்சனை – 1.**

i) இருதரப்பிலும் கற்றறிந்த வழக்கறிஞர்கள் அவரவர்கள் வழக்குரையின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் வாதிடப்பட்டிருக்கிறது. இரு மனுக்களுக்காகவும் சேர்த்து மோ.வா.வி.இ. அசல் மனு எண். 15/2023 ல் சாட்சி சான்றாவணங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மோ.வா.வி.இ. அசல் மனு எண். 15/2023 ல் உள்ள மனுதாரர் பாக்கியரேகா ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ம.த.சா.ஆ.1 முதல் ம.த.சா.ஆ. 10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மோ.வா.வி.இ. அசல் மனு எண். 18/2023 ல் உள்ள மனுதாரர் காயத்ரி ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு ம.த.சா.ஆ. 11 முதல் ம.த.சா.ஆ. 20 வரையிலான சான்றாவணங்கள்

குறியீடு செய்யப்பட்டுள்ளது. இரு மனுக்களிலும் உள்ள மனுதாரர்களின் ஊனச்சான்று நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இரு மனுக்களுக்காகவும் சேர்த்து 2வது எதிர்மனுதாரர் தரப்பில் வட்டார போக்குவரத்து அலுவலக கண்காணிப்பாளர் மாதையன் எ.சா.1 ஆக விசாரித்து, சா.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. காந்தி என்பவர் எ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு சா.சா.ஆ.Y2 மற்றும் சா.சா.ஆ.Y3 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

ii) மனுதாரர்கள் தங்களது மனு மற்றும் சாட்சியத்திலும், கடந்த 16.08.2021 அன்று காயமடைந்த பாக்கியரேகா மற்றும் காயத்ரி இரவு சுமார் 07.00 மணிக்கு வழக்கம் போல தங்களது பணிக்கு சென்றுவிட்டு திரும்பும்போது கெலமங்கலம் – தேன்கனிக்கோட்டை சாலை, கெலமங்கலம் தபால் நிலையம் அருகில், ஓம்சக்தி கிராசரி நிலையம் முன்பு நின்றுகொண்டிருந்தபோது எதிர்புறம் TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன ஓட்டுநர் சாலை விதிகளை மீறி அலட்சியமாகவும் அதிவேகமாகவும் வாகனத்தை ஓட்டி சென்று நின்று கொண்டிருந்த மனுதாரர்கள் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், இந்த விபத்திற்கு 2வது எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன ஓட்டுநர் சாலை விதிகளை மீறி அலட்சியமாகவும் அதிவேகமாகவும் வாகனத்தை ஓட்டி சென்று மனுதாரர்கள் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், இந்த விபத்திற்கு 1வது எதிர்மனுதாரரின் ஓட்டுநரும், 2வது எதிர்மனுதாரரால் காப்பீடு செய்யப்பட்ட TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன ஓட்டுநர் அதிவோகமாகவும், அலட்சியமாகவும், சாலை விதிகளைப் பொருட்படுத்தாமலும் ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தியதாக கூறப்பட்டுள்ளது.

iii) விபத்து நடந்தவுடன் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ. 1 ல் 1ம் எதிர்மனுதாரரின் TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன ஓட்டுநர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

iv) கற்றறிந்த 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் விபத்தானது TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றும், மனுதாரர்களின் கவனக்குறைவால் தான்

விபத்து ஏற்பட்டது என்றும், அதனால் தங்களது நிறுவனம் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது அல்ல என்ற வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

v) மனுதாரர்கள் தரப்பில் அதனை மறுத்து விபத்தானது TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது என்றும், விபத்து சமயம் TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனமானது 2ம் எதிர்மனுதாரரின் நிறுவனத்தின் காப்பீடு செய்யப்பட்டிருப்பதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தொகை கொடுக்கப்பட்டவர் என்று வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

vi) 1ம் எதிர்மனுதாரரின் வாகனமான TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன ஓட்டுநரால் விபத்து ஏற்படவில்லை என்று 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கூறினாலும், மேற்படி விபத்து TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன ஓட்டுநரால் ஏற்படவில்லை என்பதற்கு மேற்படி ஓட்டுநரை 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஒரு சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன ஓட்டுநர் கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் இருந்ததே விபத்திற்கான காரணமாக விபத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதை வைத்து பார்க்கும்போதும் இம்மனுவில் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுனரின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் விபத்து ஏற்படவில்லை என்பதை வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் வாயிலாக 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் நிரூபிக்காததாலும், ம.த.சா.ஆ.1 ன் படியும் TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன ஓட்டுநர் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்தது இந்த வழக்கு விபத்திற்கு காரணம் என்பது தெரிய வருகிறது. எனவே, TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன ஓட்டுநர் தான் இவ்வழக்கு விபத்திற்கு காரணம் என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

**7. பிரச்சனை 2**

i) விபத்து சமயத்தில் TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனமானது 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு

இருந்ததாக மனுவில் கூறப்பட்டுள்ளது. ம.சா.ஆ.5 காப்பீடு பாலிஸி நகலைப் பரிசீலனை செய்து பார்க்கும்போது 20.02.2021 முதல் 19.02.2022 வரை TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனத்திற்கு காப்பீடு பாலிஸி உள்ளது. விபத்தானது 16.08.2021 தேதியில் நடைபெற்றுள்ளது. எனவே, விபத்து சமயத்தில் காப்பீடு உள்ளது தெரியவருகிறது. எனவே விபத்து தேதியான 16.08.2021 ம் தேதியன்று 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு காப்பீடு செயலில் உள்ளது தெரியவருகிறது.

2 வது எதிர்மனுதாரர் தரப்பில் விபத்து சமயத்தில் TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது. மனுதாரர்கள் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யவில்லை. 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட எ.சா.1 சாட்சியத்தின்படி TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன ஓட்டுநநான ஓட்டுநனரான R. மஞ்சுநாத், த/பெ, ராஜப்பா, க/எண் 131/6, கணேஷா காலணி, கெலமங்கலம், தேன்கனிக்கோட்டை தாலுக்கா, கிருஷ்ணகிரி என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை.

1 வது எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் ஓட்டிச்சன்ற TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது என்பதை மனுதாரர்கள் தரப்பில் நிரூபிக்காததாலும், எ.சா.2 சாட்சியத்தின்படி TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன ஓட்டுநருக்கு இவ்வழக்கு விபத்து தேதியான 16.08.2021 அன்று ஓட்டுநர் உரிமம் இல்லை என்பது தெரியவருகிறது.

ம.சா.ஆ.5 ன் படி 1ம் எதிர்மனுதாரர் வாகனமான TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனமானது, விபத்து சமயத்தில் 2 வது எதிர்மனுதாரரின் நிறுவனத்தில் காப்பீடு செய்து காப்பீடு பாலிஸி உள்ளதால் 2ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்று மனுதாரர் தரப்பில் கூறப்பட்டிருக்கிறது. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர

வாகனத்தை விபத்து சமயத்தில் ஓட்டியிருப்பதாலும், அது காப்பீட்டு நிபந்தனைகளுக்கு எதிராக உள்ளது என்று சா.சா.ஆ. Y2 ன் படி தெரியவருகிறது. அதேசமயத்தில் இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட மனுதாரர்களுக்கு மேற்படி விவரங்கள் எதுவும் விபத்து சமயத்தில் தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் CMA NO 554/2024 ல் கடந்த 16.04.2025ம் தேதி காப்பீட்டு நிபந்தனைகளுக்கு எதிராக இருக்கும் பட்சத்தில் காப்பீட்டு நிறுவனம் விபத்தில் பாதிப்படைந்தவருக்கு இழப்பீடு வழங்கி அதன்பிறகு காப்பீடு செய்யப்பட்ட வாகன உரிமையாளரிடமிருந்து வசூலித்து கொள்ளலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. மேலும், மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றம் K. Nagendra vs. India Insurance Co. Ltd. 2025 SCC Online SC 2297 decided on 29.10.2025 லும், காப்பீட்டு நிபந்தனைகளுக்கு எதிராக இருக்கும் பட்சத்தில் காப்பீட்டு நிறுவனம் விபத்தில் பாதிப்படைந்தவருக்கு இழப்பீடு வழங்கி அதன்பிறகு காப்பீடு செய்யப்பட்ட வாகன உரிமையாளரிடமிருந்து வசூலித்து கொள்ளலாம் என்று கூறப்பட்டிருக்கிறது.

CMA NO 554/2024 ல் கடந்த 16.04.2025 ல் மாண்புமிகு. சென்னை உயர்நீதிமன்றமும், மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றம் K. Nagendra vs. India Insurance Co. Ltd. 2025 SCC Online SC 2297 decided on 29.10.2025 லும் காப்பீட்டு நிபந்தனைகளுக்கு எதிராக இருக்கும் பட்சத்தில் காப்பீட்டு நிறுவனம் விபத்தில் பாதிப்படைந்தவருக்கு இழப்பீடு வழங்கி அதன்பிறகு காப்பீடு செய்யப்பட்ட வாகன உரிமையாளரிடமிருந்து வசூலித்து கொள்ளலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. மேலும், மோட்டார் வாகன திருத்தச் சட்டம் 01.04.2022 லிருந்து அமலுக்கு வந்திருப்பதால் அதற்கு முன்பு இவ்வழக்கு விபத்தும், இவ்வழக்கில் சம்மந்தப்பட்டுள்ள வாகன காப்பீடு பாலிசியும் 01.04.2022 க்கு முன்பே உள்ளது. அதனால் மேற்படி CMA No. 554/2024 மற்றும் K. Nagendra vs. India Insurance Co. Ltd. 2025 SCC Online SC 2297 decided on 29.10.2025 ன் படி மனுதாரர்களுக்கு கொடுக்க வேண்டிய இழப்பிடு தொகையை 2ம் எதிர்மனுதாரர் செலுத்திவிட்டு பின்னர் 1ம் எதிர்மனுதாரரான TN 70 AH 4890 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகன உரிமையாளரிடமிருந்து 2வது எதிர்மனுதாரர் வசூலித்துக்கொள்ள வேண்டும் என்று இந்த தீர்ப்பாயம் முடிவுக்கு வருகிறது.

8. பிரச்சனை – 3

<u>மோ.வா.வி. இ. மனு.எண்.</u> 15/2023

i) மனுதாரரின் காயத்தின் தன்மை மற்றும் சிகிச்சை விவரங்களை காண்பிக்கும் வகையில் ம.சா.ஆ. 4 மற்றும் ம.சா.ஆ.7 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு 16.08.2021 அன்று கெலமங்கலம் ஆரம்ப சுகாதர நிலையத்திலும், பிறகு 16.08.2021 அன்று ஓசூா காவேரி மருத்துவமனையிலும், பின்பு திருப்பூர் கோவிந்தசாமி மருத்துவமனையிலும், பின்பு 17.08.2021, 01.09.2021 மற்றும் 20.09.2021 ஆகிய தேதிகளில் ஶ்ரீ ஹரி நாராயண வைத்தியர் விலாகத்தில் உள்நோயாளியாக சிகிச்சைப் பெற்றுள்ளது மருத்துவ ஆவணங்களிலிருந்து தெரியவருகிறது.

ஓசூர் காவேரி மருத்துவமனையில் ரூ. 6,910/– செலவு செய்ததாக ம.சா.ஆ. 7 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார். ம.சா.ஆ.7 ஆவணத்தை 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் மறுத்திருந்தாலும் ம.சா.ஆ.7 பொய்யானது என நிரூபிக்க காவேரி மருத்துவமனை நிர்வாகத்தினரை அழைத்து அது தங்களால் வழங்கப்படவில்லை என எதுவும் 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. எனவே, மனுதாரருக்கு மருத்துவ செலவாக ரூ. 6,910/– கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

ii) மனுதாரரின் ஊனம் பற்றி கணிப்பதற்காக மருத்துவக் குழு முன்பு ஆஜரானபோது 30 சதவீதம் ஊனம் எனக் குறிப்பிட்டு ஊனச்சான்று வழங்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு மருத்துவகுழுமத்தால் வழங்கப்பட்ட நீ.ம.சா.ஆ.1 ஊனச்சான்றை நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொள்கிறது. மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள ஊனத்தின் அடிப்படையில் Noori Vs Narendran and New India Assurance Co. Ltd. 2025 (1) TN MAC 447 என்ற முன்தீர்ப்பின்படி 2021ம் ஆண்டில் விபத்தில் ஏற்பட்டுள்ள ஊனத்திற்கு 1 சதவீதத்திற்கு ரூ.9000/– என மாண்புமிகு. சென்னை உயர்நீதிமன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்த மனுதாரருக்கும் 2021ம் ஆண்டில் ஏற்பட்ட ஊனத்திற்கு 1 சதவீதத்திற்கு ரூ.9000/–

என எடுத்துக்கொண்டு 30 சதவீதத்திற்கு 9000 X 30 = ரூ. 2,70,000/- என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

iii) இந்த விபத்து சமயத்தில் மனுதாரர் பாக்கியரேகா, க/பெ. முரளி ரெட்டி, தனியார் நிறுவன ஊழியர் ( ரத்னா பேக்கேஜிங் இண்டஸ்டிரிஸ், மாதம் ரூ.15,000/- சம்பாதித்து வந்ததாகக் குறிப்பிட்டுள்ளார் என்றும், இந்த விபத்தின் காரணமாக முன்பு போல் மனுதாரரால் வேலை செய்ய இயலாததால் வருமான இழப்பாக ரூ.5,00,000/- ஏற்பட்டதாக கோரியுள்ளார். அதற்காக அவரது சம்பள ஊதிய பில்லை மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர் அவரது குடும்பத்தை பராமரித்து வந்தவர் என்ற அடிப்படையில் மனுதாரர் மாதம் ரூ.12,000/- சம்பாதிக்க வாய்ப்புள்ளதாக கருதி மனுதாரரின் மாத வருமானம் ரூ.12,000/- என நிர்ணயம் செய்யப்படுகிறது. மேலும், மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களினால் மனுதாரர் குறைந்தபட்சம் 1 மாதம் வேலை செய்யாத நிலை ஏற்பட்டிருக்கும். எனவே, 1 மாத வருமான இழப்பிற்கு 1 X 12,000 = ரூ. 12,000/- மனுதாரருக்கு வருமான இழப்பின்கீழ் கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

iv) மனுதாரருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக ரூ. 50,000/- கோரியுள்ளார். அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை, இயலாமை ஆகியவற்றை கருத்தில் கொண்டு ரூ.10,000/- வலி மற்றும் வேதனைக்காக கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

v) மனுதாரர் எதிர்கால மருத்துவ செலவுக்காக ரூ.10,000/- கோரியுள்ளார். ஆனால் அவை குறித்து பார்க்கும்போது மனுதாரருக்கு எதிர்கால மருத்துவ செலவாகும் என்பதை காட்ட எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. ஆதலால், மனுதாரருக்கு எதிர்கால மருத்துவ செலவாக எந்த இழப்பீடும் கிடைக்கத்தக்கது அல்ல என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

vi) மனுதாரருக்கு உடன் இருந்தோர் செலவாக மொத்தமாக ரூ.10,000/- கோரியுள்ளார். மனுதாரர் கெலமங்கலம் ஆரம்ப சுகாதர நிலையத்திலும், பிறகு 16.08.2021 அன்று ஓசூா காவேரி மருத்துவமனையிலும், பின்பு திருப்பூர் கோவிந்தசாமி மருத்துவமனையிலும், பின்பு 17.08.2021, 01.09.2021 மற்றும்

20.09.2021 ஆகிய தேதிகளில் ஸ்ரீ ஹரி நாராயண வைத்தியர் விலாகத்தில் மருத்துவமனையிலும் 4 நாட்கள் சிகிச்சை பெற்றுள்ளார். மனுதாரருடன் ஒரு நபர் உடன் இருந்திருந்தால் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு ரூ. 500 செலவாகி இருக்கும். எனவே, மனுதாரருக்கு உடனிருந்ததோர் செலவாக 4 x 500 = ரூ.2,000/– கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

vii) மனுதாரரின் வயது, தொழில், சிகிச்சை விவரங்கள், காயத்தின் தன்னம மற்றும் ஊனச்சான்றைக் கருத்தில் கொண்டு பின்வருமாறு இழப்பீடு வழங்க நீதிமன்றம் முடிவு செய்கிறது.

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் ஊனத்திற்காக 30 X 9000 | ரூ. 2,70,000/– |
| 2. | மனுதாரரின் மருத்துவ செலவிற்காக | ரூ. 6,910/– |
| 3. | மனுதாரரின் ஊட்டச்சத்து உணவிற்காக | ரூ. 10,000/– |
| 4. | மனுதாரரின் வலி மற்றும் வேதனைக்காக | ரூ. 10,000/– |
| 5. | மனுதாரரின் வருமான இழப்பிற்காக | ரூ. 12,000/– |
| 6. | மனுதாரரின் போக்குவரத்து செலவிற்காக | ரூ. 5,000/– |
| 7. | மனுதாரருடன் உடன் இருந்தோர் செலவிற்காக | ரூ. 2,000 |
| | **மொத்தம்** | ரூ. 3,15,910/– |

viii) மனுதாரருக்கு ரூ. 3,15,910/– (ரூபாய் மூன்று லட்சத்து பதினைந்து ஆயிரத்து தொள்ளாயிரத்து பத்து மட்டும்) மேலே குறிப்பிடப்பட்டுள்ள தலைப்புகள் தவிர வேறு தலைப்புகளின் கீழ் இழப்பீடு பெற தக்கவர் அல்ல என இத்தீர்ப்பாயம் முடிவு செய்து இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**<u>மோ.வா.வி. இ. மனு.எண்.</u>** <u>18/2023</u>

i) மனுதாரரின் காயத்தின் தன்மை மற்றும் சிகிச்சை விவரங்களை காண்பிக்கும் வகையில் ம.சா.ஆ. 11 மற்றும் ம.சா.ஆ.16 முதல் ம.சா.ஆ.19 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு கெலமங்கலம் ஆரம்ப சுகாதர நிலையத்திலும், பிறகு காவேரி மருத்துவமனையிலும் 16.08.2021 முதல் 22.08.2021

வரை உள்நோயாளியாக சிகிச்சைப் பெற்றுள்ளது மருத்துவ ஆவணங்களிலிருந்து தெரியவருகிறது.

ஓசூர் காவேரி மருத்துவமனையில் ரூ. 67,140/- செலவு செய்ததாக ம.சா.ஆ. 16 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார். ம.சா.ஆ.16 ஆவணத்தை 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் மறுத்திருந்தாலும் ம.சா.ஆ.16 பொய்யானது என நிரூபிக்க காவேரி மருத்துவமனை நிர்வாகத்தினரை அழைத்து அது தங்களால் வழங்கப்படவில்லை என எதுவும் 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. எனவே, மனுதாரருக்கு மருத்துவ செலவாக ரூ. 67,140/- கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

ii) மனுதாரரின் ஊனம் பற்றி கணிப்பதற்காக மருத்துவக் குழு முன்பு ஆஜரானபோது 35 சதவீதம் ஊனம் எனக் குறிப்பிட்டு ஊனச்சான்று வழங்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு மருத்துவகுழுமத்தால் வழங்கப்பட்ட நீ.ம.சா.ஆ.1 ஊனச்சான்றை நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொள்கிறது. மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள ஊனத்தின் அடிப்படையில் Noori Vs Narendran and New India Assurance Co. Ltd. 2025 (1) TN MAC 447 என்ற முன்தீர்ப்பின்படி 2021ம் ஆண்டில் விபத்தில் ஏற்பட்டுள்ள ஊனத்திற்கு 1 சதவீதத்திற்கு ரூ.9000/- என மாண்புமிகு. சென்னை உயர்நீதிமன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்த மனுதாரருக்கும் 2021ம் ஆண்டில் ஏற்பட்ட ஊனத்திற்கு 1 சதவீதத்திற்கு ரூ.9000/- என எடுத்துக்கொண்டு 35 சதவீதத்திற்கு 9000 X 35 = ரூ. 3,15,000/- என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

iii) இந்த விபத்து சமயத்தில் மனுதாரர் காயத்ரி தனியார் நிறுவன ஊழியர் ( ரத்னா பேக்கேஜிங் இண்டஸ்டிரிஸ், மாதம் ரூ.20,000/- சம்பாதித்து வந்ததாகக் குறிப்பிட்டுள்ளார் என்றும், இந்த விபத்தின் காரணமாக முன்பு போல் மனுதாரரால் வேலை செய்ய இயலாததால் வருமான இழப்பாக ரூ.30,50,000/- ஏற்பட்டதாக கோரியுள்ளார். அதற்காக அவரது ஜுலை மாத சம்பள ஊதிய பில்லை ம.சா.ஆ.15 ஆக தாக்கல் செய்துள்ளார். அதனை பார்வையிடுகையில் மாதம் ரூ.15,714/- சம்பளம் பெற்று வந்ததாக தெரியவருகிறது. அதனை இந்நீதிமன்றம் அப்படியே

எடுத்துக்கொள்கிறது. மனுதாரர் அவரது குடும்பத்தை பராமரித்து வந்தவர் என்ற அடிப்படையில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களினால் மனுதாரர் குறைந்தபட்சம் 3 மாதம் வேலை செய்யாத நிலை ஏற்பட்டிருக்கும். எனவே, 1 மாத வருமான இழப்பிற்கு 3 X 15,714= ரூ. 47,142/- மனுதாரருக்கு வருமான இழப்பின்கீழ் கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

iv) மனுதாரருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக ரூ. 3,00,000/- கோரியுள்ளார். அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை, இயலாமை ஆகியவற்றை கருத்தில் கொண்டு ரூ.10,000/- வலி மற்றும் வேதனைக்காக கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

v) மனுதாரர் எதிர்கால மருத்துவ செலவுக்காக ரூ.1,00,000/- கோரியுள்ளார். ஆனால் அவை குறித்து பார்க்கும்போது மனுதாரருக்கு எதிர்கால மருத்துவ செலவாகும் என்பதை காட்ட எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. ஆதலால், மனுதாரருக்கு எதிர்கால மருத்துவ செலவாக எந்த இழப்பீடும் கிடைக்கத்தக்கது அல்ல என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

vi) மனுதாரருக்கு உடன் இருந்தோர் செலவாக மொத்தமாக ரூ.5,000/- கோரியுள்ளார். மனுதாரர் கெலமங்கலம் ஆரம்ப சுகாதர நிலையத்திலும், பிறகு காவேரி மருத்துவமனையிலும் 16.08.2021 முதல் 22.08.2021 வரை உள்நோயாளியாக மருத்துவமனையிலும் 7 நாட்கள் சிகிச்சை பெற்றுள்ளார். மனுதாரருடன் ஒரு நபர் உடன் இருந்திருந்தால் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு ரூ. 500 செலவாகி இருக்கும். எனவே, மனுதாரருக்கு உடனிருந்ததோர் செலவாக 7 x 500 = ரூ.3,500/- கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

vii) மனுதாரரின் வயது, தொழில், சிகிச்சை விவரங்கள், காயத்தின் தன்னம மற்றும் ஊனச்சான்றைக் கருத்தில் கொண்டு பின்வருமாறு இழப்பீடு வழங்க நீதிமன்றம் முடிவு செய்கிறது.

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் ஊனத்திற்காக 35 X 9000 | ரூ. 3,15,000/- |
| 2. | மனுதாரரின் மருத்துவ செலவிற்காக | ரூ. 67,140/- |
| 3. | மனுதாரரின் ஊட்டச்சத்து உணவிற்காக | ரூ. 10,000/- |

| | | |
|---|---|---|
| 4. | மனுதாரரின் வலி மற்றும் வேதனைக்காக | ரூ. 10,000/- |
| 5. | மனுதாரரின் வருமான இழப்பிற்காக | ரூ. 47,142/- |
| 6. | மனுதாரரின் போக்குவரத்து செலவிற்காக | ரூ. 5,000/- |
| 7. | மனுதாரருடன் உடன் இருந்தோர் செலவிற்காக | ரூ. 3,500 |
| | **மொத்தம்** | ரூ. 4,57,782/- |

viii) மனுதாரருக்கு ரூ. 4,57,782 /- (ரூபாய் நான்கு லட்சத்து ஐம்பத்து ஏழு ஆயிரத்து எழுநூற்று எம்பத்து இரண்டு ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள தலைப்புகள் தவிர வேறு தலைப்புகளின் கீழ் இழப்பீடு பெறத்தக்கவர் அல்ல என இத்தீர்ப்பாயம் முடிவு செய்து இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**பிரச்சனை 4.**

இவ்விரு மனுக்களில் மனுதாரர்களுக்கு இழப்பீட்டு தொகைக்கு மனு தேதியிலிருந்து தொகை இத்தீர்ப்பாயத்தில் வைப்பீடு செய்யப்படும் வரை ஆண்டிற்கு 7.5 % வட்டி கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. மேலும், மனுவிற்கான செலவுத்தொகையும் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றும் இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

**முடிவாக,**

**மோ. வா.இ. ம.எண். 15/2023 மனுதாரரின் மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு,**

1. மனுதாரருக்கு இழப்பீடாக 3,15,910/- (ரூபாய் மூன்று லட்சத்து பதினைந்து ஆயிரத்து தொள்ளாயிரத்து பத்து மட்டும்) 2ம் எதிர்மனுதாரர் செலுத்தவேண்டும் என்றும், 2வது எதிர்மனுதாரர் செலுத்தும் தொகையை 2வது எதிர்மனுதாரர் 1வது எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்து கொள்ள வேண்டும் என்றும்,

2. மேற்படி இழப்பீட்டுத்தொகைக்கு மனு தாக்கல் செய்த 16.11.2021 தேதியிலிருந்து தொகை செலுத்தும் காலம் வரையிலும் 7.5 % வட்டி சேர்த்து விகிதாசார செலவு தொகையுடன் 2ம் எதிர்மனுதாரர் 2 மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும் என்றும், 2வது எதிர்மனுதாரர் செலுத்தும் தொகையை 2வது எதிர்மனுதாரர் 1வது எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்து கொள்ள வேண்டும் என்றும்,

3. மேற்படி மனு இடையில் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பின் அந்தக் காலங்களுக்கு மனுதாரருக்கு வட்டி கிடைக்கத்தக்கதல்ல என்றும்,

4. மேற்படி இழப்பீட்டுத் தொகையினை இவ்வுத்தரவு நாளிலிருந்து 2 மாத காலத்திற்குள் 2ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற வங்கி கணக்கான SBI, Denkanikottai, Account No. and IFSC Code க்கோ அல்லது மனுதாரர் வங்கி கணக்கிற்கோ E Transfer மூலம் செலுத்தி வைத்து அதுகுறித்து குறிப்பு மற்றும் பேங்க் அட்வைசுடன் கடிதம் மூலம் தீர்ப்பாயத்திற்கும் அதன் மற்றொரு நகலை மனுதாரர் அல்லது அவரது வழக்கறிகருக்கும் அனுப்ப வேண்டும் என்றும்,

5. மனுதாரருக்காக வைப்பீடு செய்யப்பட்ட தொகை மற்றும் அதற்குரிய வட்டித்தொகை மனுதாரரின் வங்கி கணக்கில் நேரடியாக NEFT or RTGS மூலம் பெற்றுக்கொள்ளலாம் என்றும்,

6. வழக்கறிஞர் ஊதியம் ரூ. 9,318/- அவரது வங்கி கணக்கிற்கு E Transfer மூலம் செலுத்தி வைக்கப்படும் என்றும்,

7. மேற்படி நஷ்ட ஈட்டுக்குரிய நீதிமன்றக் கட்டணம் ரூ.2,532/- ஏற்கனவே செலுத்திய நீ.ம.க. ரூ. 372.50/- போக எஞ்சியுள்ள நீ.ம.க.ரூ.2,159.50/- ஐ இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட 30 தினங்களுக்குள் மனுதாரர் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

8. 2020(4) CTC 272, Cholamandalam Ms Genl. Ins. Co. Ltd. Vs Mr. Ayyannar S என்ற மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி தீர்ப்பாணை தயாரிக்கப்படவில்லை.

**முடிவாக,**

**மோ. வா.இ. ம.எண். 18/2023 மனுதாரரின் மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு,**

1. மனுதாரருக்கு இழப்பீடாக ரூ. 4,57,782 /- (ரூபாய் நான்கு லட்சத்து ஐம்பத்து ஏழு ஆயிரத்து எழுநூற்று எம்பத்து இரண்டு ) 2ம் எதிர்மனுதாரர் செலுத்தவேண்டும் என்றும், 2வது எதிர்மனுதாரர் செலுத்தும் தொகையை 2வது எதிர்மனுதாரர் 1வது எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்து கொள்ள வேண்டும் என்றும்,

2. மேற்படி இழப்பீட்டுத்தொகைக்கு மனு தாக்கல் செய்த 01.12.2021 தேதியிலிருந்து தொகை செலுத்தும் காலம் வரையிலும் 7.5 % வட்டி சேர்த்து விகிதாசார செலவு தொகையுடன் 2ம் எதிர்மனுதாரர் 2 மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும் என்றும், 2வது எதிர்மனுதாரர் செலுத்தும் தொகையை 2வது எதிர்மனுதாரர் 1வது எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்து கொள்ள வேண்டும் என்றும்,

3. மேற்படி மனு இடையில் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பின் அந்தக் காலங்களுக்கு மனுதாரருக்கு வட்டி கிடைக்கத்தக்கதல்ல என்றும்,

4. மேற்படி இழப்பீட்டுத் தொகையினை இவ்வுத்தரவு நாளிலிருந்து 2 மாத காலத்திற்குள் 2ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற வங்கி கணக்கான SBI, Denkanikottai, Account No. and IFSC Code க்கோ அல்லது மனுதாரர் வங்கி கணக்கிற்கோ E Transfer மூலம் செலுத்தி வைத்து அதுகுறித்து குறிப்பு மற்றும் பேங்க் அட்வைசுடன் கடிதம் மூலம் தீர்ப்பாயத்திற்கும் அதன் மற்றொரு நகலை மனுதாரர் அல்லது அவரது வழக்கறிகருக்கும் அனுப்ப வேண்டும் என்றும்,

5. மனுதாரருக்காக வைப்பீடு செய்யப்பட்ட தொகை மற்றும் அதற்குரிய வட்டித்தொகை மனுதாரரின் வங்கி கணக்கில் நேரடியாக NEFT or RTGS மூலம் பெற்றுக்கொள்ளலாம் என்றும்,

6. வழக்கறிஞர் ஊதியம் ரூ. 11,579/– அவரது வங்கி கணக்கிற்கு E Transfer மூலம் செலுத்தி வைக்கப்படும் என்றும்,

7. மேற்படி நஷ்ட ஈட்டுக்குரிய நீதிமன்றக் கட்டணம் ரூ.3,957/– ஏற்கனவே செலுத்திய நீ.ம.க. ரூ. 372.50/– போக எஞ்சியுள்ள நீ.ம.க.ரூ.1,797.50/– ஐ இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட 30 தினங்களுக்குள் மனுதாரர் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

8. 2020(4) CTC 272, Cholamandalam Ms Genl. Ins. Co. Ltd. Vs Mr. Ayyannar S என்ற மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி தீர்ப்பாணை தயாரிக்கப்படவில்லை.

**மனுதாரர்கள் தரப்பு செலவுத்தொகை பட்டியல்**

| | மோ.வா.இ.ம.எண்.15/2023 | மோ.வா.இ.ம.எண்.18/2023 |
|---|---|---|
| நீதிமன்ற கட்டணம் | ரூ.372.50 | ரூ.372.50 |
| வக்காலத்து நாமா ஸ்டாம்பு | ரூ.10 | ரூ.10 |
| புரோசஸ் கட்டணம் | ரூ.10 | ரூ.10 |
| தஸ்தாவேசுகளுக்கு ஸ்டாம்பு | ரூ.25 | ரூ.25 |
| வழக்கறிஞர் கட்டணம் | ரூ. 9,318/- | ரூ. 11,579/- |
| தட்டச்சு கட்டணம் | ரூ.100 | ரூ.100 |
| பாக்கி செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணம் | ரூ. 2,159.50/- | ரூ. 1,797.50/- |
| மொத்தம் | ரூ. 11,995 /- | ரூ. 13,894/- |

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12 -ஆம் தேதியன்று அவையறியப் பகரப்பட்டது.

Sub Judge

S VIJAY ALAGIRI

Digitally signed by S VIJAY ALAGIRI
Location: Denkanikottai
Date: 2026.03.12 17:14:48 +0530

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி:**

| | |
|---|---|
| ம.சா.1 | பாக்கியரேகா |
| ம.சா.2 | காயத்ரி |

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:**

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | முதல் தகவல் அறிக்கை நகல் |

| | |
|---|---|
| ம.சா.ஆ.2 | 16.08.2021 தேதியிட்ட விபத்து பதிவேடு அசல் |
| ம.சா.ஆ.3 | 16.08.2021 தேதியிட்ட கேஸ் சீட்அசல் |
| ம.சா.ஆ.4 | காயச்சான்றிதழ் அசல் |
| ம.சா.ஆ.5 | எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு படிவம் நகல் |
| ம.சா.ஆ.6 | எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்றிதழ் |
| ம.சா.ஆ.7 | மனுதாரருக்கு வழங்கப்பட்ட மருத்துவ பில்கள் அசல் |
| ம.சா.ஆ.8 | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை |
| ம.சா.ஆ.9 | மனுதாரரின் பேன்கார்டு அசலுடன் சரிபார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ.10 | மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் |
| ம.சா.ஆ.11 | விடுவிப்பு சான்றிதழ் அசல் |
| ம.சா.ஆ.12 | காயத்ரியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் சரிபார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ.13 | காயத்திரியின் பேன் கார்டு அசலுடன் சரிபார்க்கப்பட்டது |
| ம.சா.ஆ.14 | காயத்ரியின் வங்கி கணக்கு புத்தகம் |
| ம.சா.ஆ.15 | காயத்திரியின் சம்பள சான்றிதழ் நகல் |
| ம.சா.ஆ.16 | காவேரி மருத்துவமனையின் மருத்துவ பில்கள் |
| ம.சா.ஆ.17 | காவேரி மருத்துவமனையின் விடுவிப்பு சான்றிதழ் |
| ம.சா.ஆ.18 | 16.08.2021 தேதியிட்ட கெலமங்கலம் அரசு மருத்துவமனையின் AR காப்பி அசல் |
| ம.சா.ஆ.19 | 13.02.2022 தேதியிட்ட ஓசூர் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விடுவிப்பு சான்றிதழ் அசல் |
| ம.சா.ஆ.20 | 07.08.2021 தேதியிட்ட லட்சுமி நரசிம்மா எண்டர்பிரைசஸ் ஜுலை மாத சம்பள பட்டியல் |

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u>**

| | |
|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | மனுதாரருக்கு வழங்கப்பட்ட ஊனச்சான்றிதழ் அசல் |
| நீ.ம.சா.ஆ.2 | மனுதாரருக்கு வழங்கப்பட்ட ஊனச்சான்றிதழ் அசல் |

<u>2 ம் எதிர்**மனுதாரர் தரப்பு சாட்சிகள்:**</u>

| | |
|---|---|
| எ.சா.1 | மாதையன் |

| | |
|---|---|
| எ.சா.2 | காந்தி |

**<u>சாட்சி சான்றாவணங்கள்</u>**

| | |
|---|---|
| சா.சா.ஆ.Y1 | அனுமதி கடிதம் அசல் |
| சா.சா.ஆ.Y2 | IFFCO Tokio General Insurance Company Ltd Policy copy அசல் |
| சா.சா.ஆ.Y3 | சட்ட அறிவிப்பு நகல் |

Sub Judge

S VIJAY ALAGIRI

Digitally signed by S VIJAY ALAGIRI
Location: Denkanikottai
Date: 2026.03.12 17:14:42 +0530